# பொருளியல்

## இலங்கை
## மத்திய வங்கி



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# தேர்ச்சி மட்டம் 7.6

## இலங்கை மத்திய வங்கி (CENTRAL BANK)

அரச வங்கியாகவும், பொருளாதாரத்தில் உள்ள நிதிநிறுவனங்களின் தலைமை வங்கியாகவும் செயற்படும் வங்கியே மத்திய வங்கி எனப்படுகின்றது.

### நோக்கங்கள்: (குறிக்கோள்கள்):

2002ம் ஆண்டு திருத்தப்பட்ட நாணயச் சட்டத்திற்கு ஏற்ப இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்கள் பின்வருமாறு

1. விலை மற்றும் பொருளாதார உறுதி:
   பொது விலை மட்டத்தில் ஏற்படுகின்ற அதிகரிப்பைக் கட்டுப்படுத்தி அதனை நிலையாக வைத்திருத்தல் விலை உறுதி எனப்படும். மெய் வெளியீட்டினை அதிகரித்து தொழில் வாய்ப்பை அதிகரித்தல் பொருளாதார உறுதி எனப்படும்.

2. நிதி முறைமையின் உறுதிநிலையை பேணல்:
   நிதிசார் இடையீட்டு நடவடிக்கை செயற்பாடுகளின் காரணமாக மெய்ப்பொருளாதாரத்தில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாதவகையில் இருப்பதனை உறுதிப்படுத்துதல் ஆகும். இதன் மூலமே நிதிச்சந்தையில் ஏற்படும் நெருக்கடிகள் தவிர்க்கப்படும் வகையில் பணக் கொள்கையினை பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. அக/புற அதிர்ச்சிகளினால் நிதிச்சந்தை உறுதி பாதிபடையாது நிர்வகிக்கப்படுகின்றது.

### தொழிற்பாடுகள்:

1.நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்
2.நாணய மாற்றுவிகித கொள்கையை நடைமுறைப்படுத்துதல்.
3.உத்தியோகபூர்வ ஒதுக்குகளை முகாமை செய்தல்.
4.புழக்கப்பணத்தினை வெளியிடல்
5.அரசின் நிதி முகவராகவும், ஆலோசகராகவும் தொழிற்படல்.
6.வங்கிகள், நிதிக்கம்பணிகள் மற்றும் அரசாங்க பிணையகங்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முதல் நிலை வணிகர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்.
7.நிதி நிறுவனங்களுக்கு தீர்ப்பனவு வசதியை வழங்குதல்.

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் , ஆசிரியர்- பொருளியல் (யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## மத்திய வங்கியின் முகவராண்மைத் தொழிற்பாடுகள்

1. ஊழியர் சேமலாப நிதியை முகாமைசெய்தல்
2. வெளிநாட்டு நாணய முகாமைத்துவம்
3. பொதுப்படுகடன் முகாமைத்துவம்
4. பிராந்திய அபிவிருத்தி
5. நிதியியல் உளவறிதல்
6. பிராந்திய மத்திய வங்கியின் அலுவலகங்களை மேற்பார்வை செய்தல்.

## மத்திய வங்கியின் பணக்கொள்கை:

பொருளாதார, விலை உறுதிப்பாடு மற்றும் நிதிதிக் கொள்கையின் நிலைபேறு ஆகிய நோக்கங்களை அடைவதற்காக பணநிரம்பல், மற்றும் வட்டிவீதம் போன்றவற்றின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்காக பணக்கருவிகளை செயற்படுத்தும் செயற்பாடு நாணயக் கொள்கை / பணக்கொள்கை எனப்படும்.

## நாணயக் கொள்கையின் இலக்கு மாறிகள்

1. செயற்பாட்டு இலக்கு - சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீக்கம்
2. இடையீட்டு இலக்கு - விரிந்த பணநிரம்பல்
3. இறுதி இலக்கு - பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு.

தொகுப்பு : திரு.ச.ஜெயகுமார் , ஆசிரியர்- பொருளியல் (யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி )

கணினி வடிவமைப்பு : திரு வே.தனேஸ்குமார், ஆசிரியர்- த.தொ.தொ கிளி/ஜெயபுரம் மகாவித்தியாலயம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# நாணயக் கொள்ளைக் கருவிகள்

I. தொகைரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்

1.கொள்கை வட்டி வீதங்கள்

அ. வங்கி வீதம்

ஆ. துணை நிலை வைப்பு வீதம்

இ. துணை நிலை கடன் வீதம்

2. பகிரங்க சந்தை நடவடிக்கை

3. சட்டரீதியான ஒதுக்கு

II. பண்புரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்

1.கடன் எல்லையை தீர்மாணித்தல்

2.கடன்காரர்களுக்கான பிணைகளை தீர்மானித்தல்

3.தெரிவு செய்யப்பட்ட வட்டி வீதங்களை நிர்ணயித்தல்

4.நல் வழிப்படுத்தல்

5.மீள் நிதியிடல் வசதிகள்

## I. தொகைக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்:

மத்திய வங்கி கடன் நிரம்பலை ஒழுங்குபடுத்தும் பொருட்டு பொதுவாக எடுக்கும் நடவடிக்கைகள் இவற்றில் உள்ளடங்கும். இவை மரபுரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றவை ஆகும். இதனுள் உள்ளடங்கும் கருவிகள் ஆவன.

1. வங்கி வீதம் : மத்திய வங்கியினால் வணிக வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதமாகும். இவ்வீதத்தை உயர்த்துவதன் மூலம் பணநிரம்பலை குறைத்துக் கொள்ள முடிகின்றது.

2. துணை நிலை வைப்புவீதம்: வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையில் மிகைத் திரவத்தன்மையுள்ள போது அதனை மத்திய வங்கி தனக்குள் வைப்பாக பெறும் போது வழங்கும் வட்டிவீதமாகும். இதுவே அழைப்புக்கடன் சந்தையின் வட்டிவீதத்தின் கீழ் எல்லையாக தீர்மானிக்கப்படுகின்றது.

3. துணைநிலைக் கடன்வீதம்: வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையினை போக்கும் வகையில் மத்தியவங்கி வழங்கும் கடன் வசதிக்கான வட்டி வீதத்தின் மேல் எல்லையாக அமைகின்றது.

(துணை நிலை வட்டி வீதங்கள் உயர்த்தப்படும் போது பணநிரம்பல் குறைவடையும்)



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| | |
|---|---|
| 4. பகிரங்கச்சந்தை நடவடிக்கை: | மத்திய வங்கியானது கடன்பத்திரங்களை (திறைசேரி உண்டியல்/திறைசேரி முறிகள் போன்ற) வங்கிகளுக்கு விற்பனைசெய்தல் / மீள கொள்வனவு செய்தல் நடவடிக்கையாகும் கடன் பத்திரங்கள் விற்பனை செய்யப்படுமாயின் பணநிரம்பல் குறைவடையும். |

| | |
|---|---|
| 5. சட்ட ஒதுக்கு / காசு ஒதுக்கு வீதம்: | வணிகவங்கிகள் பொதுமக்களிடம் பெறுகின்ற வைப்புக்களின் பேரில் சட்டப்படியாக மத்திய வங்கியில் ஒதுக்க வேண்டிய ஒதுக்கை தீர்மானிக்கும் வீதமாகும். இவ்வீதம் உயர்த்தப்படின் பணநிரம்பல் குறையும். |

| | |
|---|---|
| 2. பண்புக்கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்: | மத்தியவங்கியானது கடன் அளவையும், கடன் பெறுகின்ற துறையினையும் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் பொருட்டு பயன்படுத்தும் கருவிகள் ஆகும். இவை வணிக வங்கிகள் வழங்கும் கடன்களை துறைவாரியாக கட்டுப்படுத்துகின்றன. |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk